ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 5.1 – அறிவது

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.1 – அறிவது

‡ அறிவதரியான் அனைத்துலகும் உடையான் ⋆
என்னை ஆள் உடையான் ⋆
குறிய மாண் உரு ஆகிய ⋆
கூத்தன் மன்னி அமரும் இடம் ⋆
நறிய மலர் மேல் சுரும்பார்க்க ⋆
எழில் ஆர் மஞ்ஞை நடம் ஆட ⋆
பொறி கொள் சிறை வண்டிசை பாடும் ⋆
புள்ளம் பூதங்குடி தானே ॥ **5.1.1** ॥

கள்ளக் குறளாய் மாவலியை வஞ்சித்து ⋆
உலகம் கைப்படுத்து ⋆
பொள்ளைக் கரத்த போதகத்தின் ⋆
துன்பம் தவிர்த்த புனிதன் இடம் ⋆
பள்ளச் செறுவில் கயல் உகளப் ⋆
பழனக் கழனி அதனுள் போய் ⋆
புள்ளுப் பிள்ளைக்கிரை தேடும் ⋆
புள்ளம் பூதங்குடி தானே ॥ **5.1.2** ॥

மேவா அரக்கர் தென் இலங்கை ⋆
வேந்தன் வீயச் சரம் துரந்து ⋆
மா வாய் பிளந்து மல் அடர்த்து ⋆
மருதம் சாய்த்த மாலதிடம் ⋆
காவார் தெங்கின் பழம் வீழக் ⋆

கயல்கள் பாயக் குருகிரியும் ⋆
பூவார் கழனி எழில் ஆரும் ⋆
புள்ளம் பூதங்குடி தானே ‖ **5.1.3** ‖

வெற்பால் மாரி பழுதாக்கி ⋆
விறல் வாள் அரக்கர் தலைவன் தன் ⋆
வற்பார் திரள் தோள் ஐந் நான்கும் ⋆
துணித்த வல் வில் இராமன் இடம் ⋆
கற்பார் புரிசை செய் குன்றம் ⋆
கவின் ஆர் கூடம் மாளிகைகள் ⋆
பொற்பார் மாடம் எழில் ஆரும் ⋆
புள்ளம் பூதங்குடி தானே ‖ **5.1.4** ‖

மை ஆர் தடங்கண் கருங்கூந்தல் ⋆
ஆய்ச்சி மறைய வைத்த தயிர் ⋆
நெய்யார் பாலோடமுது செய்த ⋆
நேமி அங்கை மாயன் இடம் ⋆
செய் ஆர் ஆரல் இரை கருதிச் ⋆
செங்கால் நாரை சென்றணையும் ⋆
பொய்யா நாவின் மறை ஆளர் ⋆
புள்ளம் பூதங்குடி தானே ‖ **5.1.5** ‖

மின்னின் அன்ன நுண் மருங்குல் ⋆
வேய் ஏய் தடந் தோள் மெல்லியற்கா ⋆
மன்னு சினத்த மழ விடைகள் ⋆
ஏழ் அன்றடர்த்த மாலதிடம் ⋆
மன்னு முது நீர் அரவிந்த மலர் மேல் ⋆
வரி வண்டிசை பாட ⋆

புன்னை பொன் ஏய் தாதுதிர்க்கும் ⋆
புள்ளம் பூதங்குடி தானே ॥ **5.1.6** ॥

குடையா விலங்கல் கொண்டேந்தி ⋆
மாரி பழுதா நிரை காத்து ⋆
சடையான் ஓட அடல் வாணன் ⋆
தடந்தோள் துணித்த தலைவன் இடம் ⋆
குடியா வண்டுகள் உண்ணக் ⋆
கோல நீலம் மட்டுகுக்கும் ⋆
புடை ஆர் கழனி எழில் ஆரும் ⋆
புள்ளம் பூதங்குடி தானே ॥ **5.1.7** ॥

கறை ஆர் நெடு வேல் மற மன்னர் வீய ⋆
விசயன் தேர் கடவி ⋆
இறையான் கையில் நிறையாத ⋆
முண்டம் நிறைத்த எந்தை இடம் ⋆
மறையால் முத்தீ அவை வளர்க்கும் ⋆
மன்னு புகழால் வண்மையால் ⋆
பொறையால் மிக்க அந்தணர் வாழ் ⋆
புள்ளம் பூதங்குடி தானே ॥ **5.1.8** ॥

துன்னி மண்ணும் விண் நாடும் ⋆
தோன்றாதிருளாய் மூடிய நாள் ⋆
அன்னம் ஆகி அரு மறைகள் ⋆
அருளிச் செய்த அமலன் இடம் ⋆
மின்னு சோதி நவமணியும் ⋆
வேயின் முத்தும் சாமரையும் ⋆

பொன்னும் பொன்னி கொணர்ந்தலைக்கும் ⋆
புள்ளம் பூதங்குடி தானே ॥ **5.1.9** ॥

‡ கற்றா மறித்து காளியன் தன் ⋆
சென்னி நடுங்க நடம் பயின்ற ⋆
பொற்றாமரையாள் தன் கேள்வன் ⋆
புள்ளம் பூதங்குடி தன் மேல் ⋆
கற்றார் பரவும் மங்கையர் கோன் ⋆
கார் ஆர் புயற்கைக் கலிகன்றி ⋆
சொல் தான் ஈர் ஐந்திவை பாடச் ⋆
சோர நில்லா துயர் தாமே ॥ **5.1.10** ॥

அடிவரவு — அறிவது கள்ளம் மேவா வெற்பால் மையார் மின்னின் குடை கறை துன்னி கற்றா தாம்

அறிவது முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்